3. அறிவிப்புகள்.

(அ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப் பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have reecived with great satisfaction your resolution thanking me for my address on the 21st January 1981 to the Members of the Legislature."

(ஆ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

(1) வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1981) ;

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1981) ;

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேர்வை சட்ட முன் வடிவு எண் 8/1981) ;

(4) 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981).

மேலும், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 18/1981) சட்ட மன்ற மேலவையில் ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.